**பக்கம் எண்.**

## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பட்டுக்கோட்டை

**அசல் வழக்கு எண்.** 109/2022

2023ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 23 ம் நாள் புதன்கிழமை வாதிகள் தரப்பு சாட்சியாகிய PW1வது நபரின் வாக்குமூலம் (1969ம் ஆண்டின் 54வது விதியில் 9வது பிரிவின் படி) பெஞ்ச்கிளார்க் கிரேடு 3 திரு.க.ராக்கப்பன் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| **பெயர் :** | வின்செண்ட் சவரியார் | **தொழில் :** | டாஸ்மார்க் மேற்பார்வையாளர் |
| **தந்தை/கணவர் பெயர் :** | ஆரோக்கியசாமி | **சமயம் :** | கிரிஸ்டின் |
| **ஊர் :** | புனல்வாசல் | **வயது** | 51 |
| **தாலுக்கா :** | பட்டுக்கோட்டை | **சாதி:** | - |

**23.08.2023**

**முதல் விசாரணை**

நான் அசல் வழக்கில் வாதி ஆவேன், நான் எனது முதன்மை சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விபரம் எனக்கு தெரியும், அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். 26.08.2010 ம் தேதியிட்ட வாதி கிரயம் வாங்கிய கிரயப்பத்திரம் அசல் **வா.சா,ஆ.1** ஆகும். தாவா சொத்திற்கான பட்டா மாறுதல் உத்தரவு அசல் **வா.சா,ஆ.2** ஆகும். கணினி பட்டா அசல் **வா.சா,ஆ.3** ஆகும். கிராம நிர்வாக அலுவலர் வழங்கிய அடங்கல் அசல் **வா.சா,ஆ.4** ஆகும் ( பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் ஆட்சேபணைக்குட்பட்டு குறியீடு செய்யப்பட்டது) 21.12.2021ம் தேதியிட்ட வட்டாட்சியர் உத்தரவு அசல் **வா.சா,ஆ.5** ஆகும். 05.06.2021ம் தேதியிட்ட 1-ம் எதிர்வாதி வழக்கறிஞர் மூலம் அனுப்பிய அறிவிப்பு அசல் **வா.சா,ஆ.6** ஆகும். 06.07.2021ம் தேதி வாதி அவருடைய வழக்கறிஞர் மூலம் அனுப்பிய பதில்

பக்கம் எண்.

அறிவிப்பு அலுவலக நகல் **வா.சா,ஆ.7** ஆகும். 05.08.2021ம் தேதி வாதியை எதிர்வாதிகள் கொலை மிரட்டல் விட்டதற்கான வாதியின் புகார் மனுவின் ரசீது அசல் **வா.சா,ஆ.8** ஆகும். 11.08.2022 ம் தேதியிட்ட முதல் தகவல் அறிக்கை சான்றிட்ட நகல் **வா.சா,ஆ.9** ஆகும். 25.08.2021ம் தேயிட்ட ஆன்லைன் புகார் ரசீது அசல் **வா.சா,ஆ.10** ஆகும். தாவாப்படி தீர்ப்பாக பிராத்திக்கிறேன்.

**பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

*Taken down by the typist to my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him/her to be Correct.*

Sd/- M. Ravichandran,B.A.,B.L.,
District Munsif, Pattukkottai.